©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 3.20 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 9] CHENNAI, WEDNESDAY, FEBRUARY 26, 2020
Maasi 14, Vikari, Thiruvalluvar Aandu–2051

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | Pages. |
|---|---|
| COMMERCIAL TAXES AND REGISTRATION DEPARTMENT | |
| Indian Stamp Act:—Provisions for the consolidation of duty chargeable in respect of issue of Insurance Policies by the New India Assurance Company Limited, Divisional Office, Chennai-1 for certain period, etc., | 128 |
| Provisions for the consolidation of duty chargeable in respect of issue of Policies by the Star Health and Allied Insurance Company Limited, Chennai for certain period. | |
| Amendment to Notifications .. .. | 128 |
| தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | |
| Industrial Tribunal for Adjudication .. .. | 128-129 |
| Labour Courts for Adjudication .. .. | 129-132 |
| பொதுத்துறை | |
| [விருதுகள்–குடியரசு தினம், 2020– மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் வீர தீரச் செயலுக்கான அண்ணா பதக்கம், 2020–பரிசுத்தொகை மற்றும் பதக்கம் வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.] | 132-134 |
| YOUTH WELFARE AND SPORTS DEVELOPMENT DEPARTMENT | |
| Tamil Nadu Physical Education and Sports University Act:— Nomination of three Professors of the Departments of Tamil Nadu Physical Education and Sports University as members to the Syndicate by the Honourable Governor Chancellor. .. . . .. | 134 |



D.T.P.—II-2 (9)—1

## NOTIFICATIONS BY GOVERNMENT

### COMMERCIAL TAXES AND REGISTRATION DEPARTMENT

**Notifications under the Indian Stamp Act.**

**Provisions for the consolidation of duty chargeable in respect of issue of Insurance Policies by the New India Assurance Company Limited, Divisional Office, Chennai - 1 for certain period under the Act.**

*[G.O. (Rt).No. 35, Commercial Taxes and Registration (J1), 28th January 2020, மார்கழி 14, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/CTR/149/2020.—In exercise of the powers conferred by clause (b) of sub-section (1) of Section 9 of the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), the Governor of Tamil Nadu hereby provides for the consolidation of duty of Rs.1,00,000/- (Rupees One Lakh only) chargeable under the said Act in respect of issue of insurance policies by the New India Assurance Company Limited, Divisional Office, Chennai-1 for the period from January 2020 to October 2020.

**Provisions for the consolidation of duty chargeable in respect of issue of Insurance Policies by the Cholamandalam MS General Insurance Company Limited, Chennai for certain period under the Act.**

*[G.O. (Rt).No. 60, Commercial Taxes and Registration (J1), 11th February 2020, தை–28, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/CTR/150/2020.—In exercise of the powers conferred by clause (b) of sub-section (1) of Section 9 of the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), the Governor of Tamil Nadu hereby provides for the consolidation of duty of Rs.80,00,000/- (Rupees Eighty Lakh only) chargeable under the said Act in respect of issue of insurance policies by the Cholamandalam MS General Insurance Company Limited, Chennai for the period from 15-02-2020 to 15-10-2020.

**Provisions for the consolidation of Duty chargeable in respect of issue of Policies by the Star Health and Allied Insurance Company Limited, Chennai–34 for certain period under the Act.**

**Amendment to Notifications**

*[G.O. (Rt).No. 55, Commercial Taxes and Registration (J1), 7th February 2020, தை–24, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/CTR/151/2020.—In exercise of the powers conferred by clause (b) of sub-section (1) of Section 9 of the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the Notification No.II(2)/CTR/387/2019 published in page 480 of Part II–Section 2 of the *Tamil Nadu Government Gazette* No.23, dated 05-06-2019.

AMENDMENT.

For the expression "Rs.50,00,000/- (Rupees Fifty Lakh)" appearing in the said notification, the expression "Rs.80,00,000/- (Rupees Eighty Lakh only)" shall be substituted.

NOTIFICATION-II.

*[G.O. (Rt).No. 55, Commercial Taxes and Registration (J1), 7th February 2020, தை 24, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/CTR/152/2020.—In exercise of the powers conferred by clause (b) of sub-section (1) of Section 9 of the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Notification No.II(2)/CTR/775/2019 published in page 790 of Part II-Section 2 of the *Tamil Nadu Government Gazette* No.40, dated 02-10-2019.

AMENDMENT.

For the expression "30th November 2019" appearing in the said notification, the expression, 31st March 2020", shall be substituted.

C. SEKAR,
*Joint Secretary to Government.*

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**Disputes between Workmen and Managements referred to Industrial Tribunal for Adjudication**

**கனிஷ்க் கோல்டு பிரைவேட் லிமிடெட்,**

*[அரசாணை (ப) எண்.51, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 28 ஜனவரி 2020, தை 14, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/153/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, செங்கல்பட்டு மாவட்டம், புக்கத்துறை கிராமத்தில் இயங்கி வரும் கனிஷ்க் கோல்டு பிரைவேட் லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் பொதுத் தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யு) என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை, தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு சென்னை தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிற்தீர்ப்பாயம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

"கனிஷ்க் கோல்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை வங்கிகள் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்ட நிலையிலும் நிறுவனத்தை மீண்டும் திறந்து இயக்கப்படாத சூழ்நிலையிலும் நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு சட்டப்படி கிடைக்கக்கூடிய உரிமைகள் மற்றும் பணப்பயன்களை பெற்றுத்தரக் கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்க".

**கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், பிளாண்ட்2, மேட்டூர் அணை, சேலம்**

*[அரசாணை (டி) எண்.74, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 3 பிப்ரவரி 2020, தை 20, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/154/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட், பிளாண்ட்–2, மேட்டூர் அணை, சேலம் என்ற நிர்வாகத்திற்கும் மேட்டூர் கெமிக்கல் & பிளாஸ்டிக்ஸ் தொழிலாளர்கள் சங்கம், மேட்டூர் அணை, சேலம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சென்னை தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சென்னை தொழிற்தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை தொழிற்தீர்ப்பாயம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

மேட்டூர் அணை, கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிட், பிளாண்ட்–2 நிறுவனப் பணியாளர்கள்/தொழிலாளர்களுக்கு 2017–18 ஆம் ஆண்டிற்கு 25 சதவீத போனஸ் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

## Disputes between Workmen and Managements referred to Labour Courts for Adjudication

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலி லிமிடெட், நாகர்கோவில் மண்டலம், நாகர்கோவில்**

*[அரசாணை (டி) எண்.30, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 23 ஜனவரி 2020, தை 9, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/155/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலி லிமிடெட், நாகர்கோவில் மண்டலம் நாகர்கோவில் என்ற நிர்வாகத்திற்கும் தமிழக அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம் (சிஐடியு), நாகர்கோவில் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு V. சேதுநாத் ஓட்டுநருக்கு (பணி எண் 7056) ஊதிய உயர்வினை வருங்காலம் பாதிக்கும் வண்ணம் இரண்டு வருடங்கள் நிறுத்தி வைத்து நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ள 8–11–2017 தேதியிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கரூர்**

*[அரசாணை (டி) எண்.34, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 23 ஜனவரி 2020, தை 9, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/156/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கரூர் என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் சங்கம் (சிஐடியு), அரவக்குறிச்சி கிளை, கரூர் மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தகராறு திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நீதிமன்ற தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு R.K. ரமேஷ் (பணி எண் 08 DR 846 / 13954 ) ஓட்டுநருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை மூன்று வருட காலத்திற்கு கூட்டு விளைவுடன் தொடர்ந்து தள்ளி வைத்தும், தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த 12–02–2015 முதல் 17–03–2015 வரையிலான நாட்களை, தகுதிக்குட்பட்ட விடுப்பாக கருதியும் நிர்வாகம் வழங்கிய 01–09–2016 நாளிட்ட உத்தரவினை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா?

ஆம். எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

Verified @ RealEstate

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் மதுரை**

*[அரசாணை (டி) எண். 50, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 28 ஜனவரி 2020, தை 14, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/157/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை என்ற நிர்வாகத்திற்கும், அரசு போக்குவரத்து மதுரை தொழிலாளர் சங்கம் (CITU), மதுரை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும் **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு மதுரை தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு எம். தங்கராஜ், நடத்துநருக்கு (பணி எண் CR 14303), வருடாந்திர ஊதிய உயர்வை 2 வருட காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து நிர்வாகம் வழங்கிய **16–04–2018** நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்), கோவை**

*[அரசாணை (டி) எண்.71, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 3 பிப்ரவரி 2020, தை 20, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/158/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, உதவி மேலாளர், பணியாளர் துறை பிரிவு–2 மற்றும் நிர்வாகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்), கோவை என்ற நிர்வாகத்திற்கும் நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள் பாதுகாப்பு தொழிற்சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும் **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு T. பாலமுருகன் (ப.எண். C 23832) நடத்துனருக்கு, நிர்வாகம் **11–05–2016** அன்று வழங்கப்படவேண்டிய முதல் கட்ட ஆய்வு பலன்களை (Review) **11–05–2016** முதல் முறையாக வழங்கியும் அதற்கான நிலுவைத் தொகையினையும் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண்.73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 3 பிப்ரவரி 2020, தை 20, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/159/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்), கோவை என்ற நிர்வாகத்திற்கும், தமிழ் போக்குவரத்துக் கழக சீருடை பணியாளர் தொழிற்சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும் **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு V. சுப்ரமணியன் (ப.எண்.11526) நடத்துனருக்கு, நிர்வாகம் **01–05–2014** அன்று முதல் வழங்கப்படவேண்டிய 5ம் கட்ட ஆய்வுப் பலன்களை வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண்.105, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 11 பிப்ரவரி 2020, தை 28, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/160/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, உதவி மேலாளர், பணியாளர் துறை பிரிவு–2 மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்), கோவை என்ற நிர்வாகத்திற்கும் நேதாஜி போக்குவரத்து தொழிலாளர்கள் பாதுகாப்பு தொழிற்சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும் **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு O. கருப்புசாமி (ப.எண். C. 23881) நடத்துனருக்கு, நிர்வாகம் அக்டோபர் 2016 அன்று வழங்க வேண்டிய முதல் கட்ட ஆய்வு பலன்களை (Review) அக்டோபர் 2016 முதல் முறையாக வழங்கியும், அதற்கான நிலுவைத் தொகையினையும் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**லுக் இந்தியா பிரைவேட் லிட்., ஒசூர்**

*[அரசாணை (டி) எண்.72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 3 பிப்ரவரி 2020, தை 20, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/161/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக, லுக் இந்தியா பிரைவேட் லிட்., ஒசூர் என்ற நிர்வாகத்திற்கும் லுக் இந்தியா நேஷனல் எம்ப்ளாயீஸ் யூனியன், ஒசூர் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சேலம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

ஒசூர், லுக் இந்தியா பிரைவேட் லிட் என்ற நிறுவனத் தொழிலாளர்களுக்கு 2017–2018 ஆம் ஆண்டிற்கு 30% போனஸ் மற்றும் லாபத்தில் ஊக்கத்தொகை (Production Incentive) ரூ.1,20,000/– வழங்குமாறு கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**ஜேப்பியார் பொறியியல் கல்லூரி**

*[அரசாணை (ப) எண்.53, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 28 ஜனவரி 2020, தை 14, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/162/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, ஜேப்பியார் பொறியியல் கல்லூரி என்ற நிர்வாகத்திற்கும் புதிய ஜனநாயக வாகன ஓட்டுநர்கள் மற்றும் டெக்னீசியன்கள் சங்கம், (ஜேப்பியார் பொறியியல் கல்லூரி கிளை) என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

"ஊதிய உயர்வு குறித்த தொழிற்தாவா (ஆ/409/2017) நிலுவையில் இருந்து வரும் நிலையில் தன்னிச்சையாக செட்டில்மெண்ட் வழங்கி 17–09–2017 முதல் கீழ்க்கண்ட 38 ஓட்டுநர்களுக்கு பணிமறுப்பு செய்த நிர்வாகத்தின் செயல் பிரிவு 33–க்கு முரணானது என்ற தொழிற்சங்கத்தின் கூற்று நியாயம்தானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

| *வ.எண்.* | *பெயர்* | *பணி எண்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | M. கண்ணண் | 50500 |
| 2 | S. தீனதயாளன் | 50546 |
| 3 | S. சுரேஷ் | 50538 |
| 4 | A. வேம்புலி | 61240 |
| 5 | G. சரவணன் | 60758 |
| 6 | S. வேலாயுதம் | 61079 |
| 7 | B. தனசேகர் | ––– |
| 8 | G. சகாயஜான் | 50338 |
| 9 | M. சுரேஷ் | 51165 |
| 10 | T. பகவான் | 51002 |
| 11 | P. செல்வம் | 50530 |
| 12 | D. சரவணன் | 51097 |
| 13 | D. பிரவீன்குமார் | ––– |
| 14 | G. கண்ணன் | 50352 |
| 15 | V. சண்முகம் | 60694 |
| 16 | N. சேகர் | 50495 |
| 17 | C. ரமேஷ் | 50572 |
| 18 | M. ராஜேந்திரன் | 51112 |
| 19 | S. வடிவேல் | 51205 |
| 20 | S. ரவி | 50596 |
| 21 | P. ரவிச்சந்திரன் | 50332 |
| 22 | H. சமீர்உசேன் | 50353 |
| 23 | G. கன்னிவேல் | 50109 |
| 24 | S. பவுன்ராஜ் | 51115 |
| 25 | A. சேட்டு | 60756 |
| 26 | M. கோவிந்தராஜ் | ––– |
| 27 | R. முத்துக்குமரன் | 50490 |
| 28 | E. ராஜ் | 50556 |

Verified RealEstate

| *வ.எண்.* | *பெயர்* | *பணி எண்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 29 | V. செந்தில்குமார் | 51234 |
| 30 | A. எபிநேசன் | 50409 |
| 31 | S.. ஈஸ்வரன் | 50545 |
| 32 | S. நடராஜ் | 50381 |
| 33 | K. பச்சையப்பன் | 50384 |
| 34 | H. சபிர்உசேன் | 51130 |
| 35 | L. சுதாகர் | 51323 |
| 36 | L. தனஞ்செழியன் | 50536 |
| 37 | M. பிச்சைமுத்து | 50321 |
| 38 | K. நாகராஜ் | 60759 |

**கிரண் குளோபல் கெம்ஸ் லிமிடெட்**

*[அரசாணை (ப) எண்.66, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 3 பிப்ரவரி 2020, தை 20, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/163/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, கிரண் குளோபல் கெம்ஸ் லிமிடெட் என்ற நிர்வாகத்திற்கும் ஜனநாயக பொது தொழிலாளர் சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை, சென்னை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும் **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையை பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

தொழிற்சங்கத்தின் உறுப்பினரான திரு. கே. பாளையம், பெங்களூரு கிளைக்கு செல்லுமாறு நிர்வாகம் அளித்துள்ள பணி மாறுதல் உத்தரவை திரும்ப பெறவும், பழிவாங்கும் நடவடிக்கையை கைவிட்டு திரு. கே. பாளையம் அவர்களுக்கு மீண்டும் பின் சம்பளம், பணித்தொடர்ச்சி மற்றும் இதர சலுகைகளுடன் சோழவரம் கிளையிலேயே பணியில் அமர்த்திட வேண்டும் என்கிற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**மாநகர போக்குவரத்துக் கழகம், சென்னை**

*[அரசாணை (ப) எண்.85, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ1)த் துறை, 4 பிப்ரவரி 2020, தை 21, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/164/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, மாநகர போக்குவரத்துக் கழகம் என்ற நிர்வாகத்திற்கும் அரசாங்க போக்குவரத்து ஊழியர் சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) **10(1)(c)** பிரிவிலும் **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10 (2A) பிரிவின்கீழ், இந்த ஆணையை பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. எஸ். சிவசங்கர், நடத்துனரின் (பணி எண். C 15641) ஆண்டு ஊதிய உயர்வினை மூன்று வருட காலம் தொடர் விளைவுடன் தள்ளிவைத்து நிர்வாகம் பிறப்பித்த 23–12–2016 நாளிட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டும் மற்றும் அவர் தற்காலிக பணி நீக்கத்திலிருந்த 17–03–2015 முதல் 24–04–2015 வரையிலான நாட்களை பணிக்காலமாக கருதி சம்பளம் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**முகமது நசிமுத்தின்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

**பொதுத்துறை**

*தலைமைச் செயலகம், 2020 பிப்ரவரி 26*

No.II(2)/PU/165/2020.—

[விருதுகள்–குடியரசு தினம், 2020– மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் குடியரசு தினத்தன்று வழங்கப்படும் வீர தீரச் செயலுக்கான அண்ணா பதக்கம், 2020 – பரிசுத்தொகை மற்றும் பதக்கம் வழங்க ஆணை வெளியிடப்படுகிறது.]

**கீழ்க்கண்ட** அரசாணை வெளியிடப்படுகிறது:—

*[அரசாணை (நிலை) எண்.81, பொது (பொது–1)த் துறை, 20 ஜனவரி 2020]*

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண் 383, பொது (பல்வகை)த் துறை, நாள் 12–02–1980.
2. அரசாணை (நிலை) எண் 734, பொது (பல்வகை)த் துறை, நாள் 01–04–1986.
3. அரசாணை (3டி) எண் 1, பொது (பொது–1)த் துறை நாள் 24–01–2012.

4. அரசாணை (நிலை) எண் 94, பொது (பொது—1)த் துறை நாள் 21-01—2016.

**ஆணை:** ***எண் 81, பொது (பொது—1)த் துறை 20 ஜனவரி 2020.***

பார்வை 1, 2 மற்றும் 4—ல் படிக்கப்பட்ட அரசாணைகளில், வீரதீரச் செயல்புரிந்த பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு அண்ணா பதக்கம் தோற்றுவிக்கப்பட்டு, பொதுமக்களில் மூவருக்கும், அரசு ஊழியர்கள் மூவருக்கும் வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. பார்வை 3—ல் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்குறிப்பிட்ட அண்ணா பதக்கத்திற்கான விருதுத் தொகையை 2012—ம் ஆண்டு முதல் ரூ.25,000/—லிருந்து ரூ.1,00,000/— ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 2012 ஆம் ஆண்டு முதல் வீரதீரச் செயல்புரிந்த பொதுமக்களில் மூவருக்கும், அரசு ஊழியர்களில் மூவருக்கும் ரூ.5,000/— மதிப்புள்ள தங்கமுலாம் பூசிய வெள்ளிப்பதக்கமும், ரூ.1,00,000/—க்கான காசோலையும் மற்றும் சான்றிதழும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் குடியரசு தினத்தன்று வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகின்றனர்.

3. 2020—ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும் வீர தீர செயலுக்கான அண்ணா பதக்கம் பின்வரும் நபர்களுக்கு வழங்க அரசால் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

அரசு ஊழியர்கள் பிரிவு:

(i) திரு இரா. ராஜா,
ஓட்டுநர்,
தீயணைப்பு மீட்பு பணி நிலையம்,
வேளாங்கண்ணி, நாகப்பட்டினம் மாவட்டம்.

பொது மக்கள் பிரிவு:

(ii) (அ) மறைந்த திரு. ஏகேஷ்,
த/பெ திரு தியாகராஜன்

(ஆ) திரு. பிரிஸ்டன் பிராங்களின்,
த/பெ திரு ஐசக்

(இ) திரு. வினித்
த/பெ திரு சிகாமணி

(ஈ) திரு. சார்லிபன்
த/பெ மறைந்த திரு துரைராஜ்

(உ) திரு. ஈஸ்டர் பிரேம்குமார்,
த/பெ திரு தேவதாஸ்,
கொண்டஞ்சேரி கிராமம்,
திருவள்ளூர் மாவட்டம்.

(iii) செல்வி. வினோதினி
த/பெ திரு ஜெகராஜ்
கங்கையம்மன் கோயில் தெரு,
கோணிமேடு, சென்னை—52.

(iv) திருமதி. தனலட்சுமி
க/பெ திரு முத்து
ஓம் சக்தி நகர், 2—வது தெரு,
காட்டுப்பாக்கம், பூந்தமல்லி,
சென்னை.

(v) (அ) திரு. பழனியப்பன்,
த/பெ திரு தியாகராஜன்,
மற்றும்

(ஆ) திருமதி. இந்திராகாந்தி,
க/பெ திரு பழனியப்பன்,
திரௌபதையம்மன் கோவில் தெரு,
முத்தம்பாள்புரம் கிராமம்,
ஒரத்தநாடு வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

வீர தீர செயலுக்கான அண்ணா பதக்கம் "பொது மக்கள்" பிரிவில் மூன்று நபர்களுக்கும், "அரசு ஊழியர்கள்" பிரிவில் மூன்று நபர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. எனினும் பொது மக்களிடையே வீர தீர செயல்களை ஊக்குவிக்கும் வகையில், **சிறப்பு நிகழ்வாக** "பொது மக்கள்" பிரிவில் நான்கு நபர்களுக்கு "வீர தீர செயலுக்கான அண்ணா பதக்கம்" வழங்க அரசு முடிவு செய்து ஆணையிடுகிறது. மேலும், வீர தீர செயலுக்கான அண்ணா பதக்கம் தற்போது வாழும் நபர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தாலும், மறைந்த திரு ஏகேஷ், த/பெ திரு தியாகராஜன் அவர்களின் தன்னலமற்ற செயலை கருத்தில் கொண்டு, சிறப்பு நிகழ்வாக கருதி அன்னாருக்கு அண்ணா பதக்கம் வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3, வரிசை எண்.(i), (iii) மற்றும் (iv)—ல் உள்ள நபர்களுக்கு தலா ரூ.1,00,000/—த்தை (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) பரிசுத் தொகையாகவும், வரிசை எண். (ii)—ல் உள்ள 5 நபர்களுக்கு பரிசுத் தொகையான ரூ.1,00,000/—யை (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) தலா ரூ.20,000/—மாக (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) பிரித்து வழங்கவும், வரிசை எண்.v—ல் உள்ள 2 நபர்களுக்கு பரிசுத் தொகையான ரூ.1,00,000/—யை (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) தலா ரூ.50,000/—மாக (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) பிரித்து வழங்கவும், மேற்கண்ட பரிசுத் தொகையுடன், அனைவருக்கும் ரூ.5,000/— மதிப்புள்ள பதக்கமும் வழங்க ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும் மேலே பத்தி 3, வரிசை எண்.(ii)—ல் உள்ள மறைந்த திரு ஏகேஷ் அவர்களின் தாய் திருமதி தி. பத்மா அவர்களின் பெயரில் பரிசுத் தொகையான ரூ.20,000/—த்தை (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) காசோலையாக பெற்றுத் தரவும், பத்தி 3—ல் உள்ள மற்ற அனைவருக்கும் பத்தி 4—ல் ஒப்பளிக்கப்பட்ட பரிசுத் தொகையினை அவரவர் பெயரில் காசோலையாக வழங்கிடவும் அரசு ஆணையிடுகிறது.

5. பத்தி 4—ல் ஒப்பளிக்கப்பட்ட விருதுத் தொகை மற்றும் பதக்க செலவினமான ரூ. 5,50,000/— (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்க ஆணையிடப்படுகிறது.

> "2075 00—பல்வகை பொதுவான பணிகள்—800—ஏனைய செலவு—மாநிலச் செலவினங்கள்—BQ. துணிகரச் செயலுக்குப் பரிசுகள் — 334—ஏனைய செலவுகள்— 01—ஏனைய இனங்கள்" (குதொகு பழையது 2075 00 800 BQ. 3416) (IFHRMS புதியது 2075 00 800 BQ 33401)

6. மேலே பத்தி 4—ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கூடுதல் நிதியாக ரூ.1,30,000/— (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) 2019—2020ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். நிதி ஒதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 4—ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட பிரிவு அலுவலர் பொது (பட்டியல்—அ)த் துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் பதக்கங்களின் மொத்த செலவுத் தொகையான ரூ.50,000/—ஐ (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) பணமாக்கி பிரிவு அலுவலர், பொது (பொது—1)த் துறையிடம் ரொக்கமாக வழங்கிட அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலே பத்தி 4—ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2019—2020 ஆம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (பொது/வரவு செலவு—II)த் துறைக்கு அனுப்புமாறு பொது (பல்வகை)த் துறை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. இவ்வாணைக்கு நிதித் துறையின் அ.சா.கு.எண்.2316/ பொது/2020, நாள்.20–01–2020 இசைவுடனும் ஒப்பளிப்பு பேரேடு எண்.2850 **(இரண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பது)** பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ப. செந்தில்குமார்,**
*அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ)*

YOUTH WELFARE AND SPORTS DEVELOPMENT DEPARTMENT

**Nomination of three Professors of the Departments of Tamil Nadu Physical Education and Sports University as members to the Syndicate by the Honourable Governor-Chancellor under the Tamil Nadu Physical Education and Sports University Act, 2004.**

*[G.O. (D).No. 7, Youth Welfare and Sports Development (YW2), 12th February 2020, தை 29, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/YWSD/166/2020.—In exercise of the powers conferred under Section 22(2) Class II - Other Members (a) of the Tamil Nadu Physical Education and sports University Act, 2004, the Hon'ble Governor-Chancellor hereby nominate the following three Professors of the Departments of Tamil Nadu Physical Education and Sports University as members to the Syndicate of Tamil Nadu Physical Education and Sports University for a period of three years with effect from 30-01-2020 or till he/she ceases to be a Professor of Tamil Nadu Physical Education and Sports University whichever is earlier.

i Dr.V.Mangaiyarkarasi,
Professor,
Department of Sports Management,
Sports Psychology and Sociology,
Tamil Nadu Physical Education and
Sports University,
Chennai.

ii. Dr.R.Ramakrishnan,
Professor and Head,
Department of Advanced Sports Training
and Sports Technology,
Tamil Nadu Physical Education and
Sports University,
Chennai.

iii. Dr.S.Prem Kumar,
Professor and Head,
Department of Sports Management,
Sports Psychology and Sociology,
Tamil Nadu Physical Education and
Sports University,
Chennai.

DHEERAJ KUMAR,
*Principal Secretary to Government (FAC).*

Verified Redistate

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU